# சங்க இலக்கியத்தில் நிலம், நீர், காற்று பயன்பாட்டுப் பின்புலம்

**கோ.அமுதவல்லி**
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை, என்.ஜி.எம் கல்லூரி
பொள்ளாச்சி

**மலர்:** 3

**இதழ்:** 2

**தொகுதி:** II

**மாதம்:** அக்டோபர்

**வருடம்:** 2018

**ISSN:** 2454-3993

சங்ககால மக்கள் தங்களது வாழ்கைச்சூழலில் இயற்கைக்கு முதலிடம் கொடுத்து வாழக் கற்றிருக்கின்றார்கள். தலைவனது நாட்டைக் குறிப்பதற்கும், தலைவன் பொருள்வயின் பிரிந்துசெல்லும் நிலையில் வழியின் பாங்கைக் குறிப்பதற்கும், தலைவியின் மனநெகிழ்விற்கும் நிலத்தைப் பின்புலமாகச் சுட்டியிருப்பதையும், தலைவியின் அழகு குறைந்து வருவதைக் குறிக்கவும், தலைவன் இல்லாது தலைவி இல்லை என்ற காதல் நிகழ்வைக் குறிக்கவும், மன்னனின் படைப்பரப்பிற்கும் நீர் பின்புலமாகச் சுட்டப் பட்டியிருப்பதையும், தலைவனைப் பிரிந்து இருக்கக்கூடிய தலைவிக்கு தென்றல் காற்று வருத்தம் தருவதையும், காற்றுடன் தலைவி பேசக்கூடிய நிகழ்வையும், பொருள்வயின் பிரிந்து செல்லும் தலைவனுக்கு மேலைக்காற்றின் செயலையும், மீனவர் படகைச் செலுத்த ஒண்பதம் பார்த்து காத்திருத்தல் என்ற அனைத்து நிகழவிற்கும் நிலம், நீர், காற்று என்னும் இம்மூன்றையும் பின்புலமாகச் சுட்டுகின்ற தன்மை குறித்து ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

**தலைவன் மலைநாட்டவன் என்பதைக்குறிக்க – குறிஞ்சி நிலம் பின்புலமாகச்சுட்டல்**

மனிதன் ஒர் இடம் விட்டு இன்னொரு இடத்திற்குச் சென்றால் தான் எந்தப்பகுதியைச் சார்ந்தவன் என்பதைக் குறிக்க வட்டாரத்ததைச் சுட்டும் வழக்கம் இருந்துவருகிறது. இப்பழக்கம் இன்று மட்டுமல்ல சங்ககாலம் முதற்கொண்டே இருந்துவந்திருக்கின்றது. சங்ககாலத்தில் வாழ்ந்த மக்கள் வட்டாரத்தைக் குறிப்பிடாமல் திணை அடிப்படையில் நிலம் பிரிக்கப்பட்டிருந்த காரணத்தால் தலைவனைக்குறிக்க நிலத்தைச் சுட்டியிருக்கின்றனர்.

**“சாத்த மரத்த பூழில் எழு புகை**
**கூட்டு விரை கமழும் நாடன் (ஐங்குறு.212)**

என்ற பாடல் வரியின் வழியாகச் சந்தன மரங்களுக்கு இடையே உள்ள நிலத்தில் சுட்டு எரிக்கப்படும் அகில் கட்டையின் நறிய புகை சந்தனப்பூக்களின் நறுமணத்தோடு சேர்ந்து, ஒரு புதுக்கலவை மணமாகப் பரவுவதற்கு இடனான மலைநாடன் என்று குறிஞ்சி நிலத்தைக் குறிப்பிட்டியிருப்பதை ஆராய்ந்து அறியமுடிகின்றது.

இதுபோன்றே தொல்காப்பியர் கருப்பொருளைக் கூறுகையில் நிலத்தை முதன்மைப்படுத்தியிருக்கின்றார் என்பதை,

**"முதல்எனப் படுவது நிலம்பொழுது இரண்டின்**
**இயல்பென மொழிப இயல் புணர்ந் தோரே" (தொல்.பொருள்,4)**

என்ற நூற்பாவின் வழி அறியலாகின்றது. இதன்வழி அனைத்து உயிர்களும் வாழ்வதற்கு நிலம் முதன்மை இடம் பெறுவதையும், அடையாளப்படுத்துவதையும் ஆராய்ந்து உணரமுடிகின்றது.

**தலைவியின் மனநெகிழ்விற்கு மருதநிலத்தின் மண் பின்புலமாகச் சுட்டல்**

மருதம் வயலும் வயல் சார்ந்த பகுதி. அவ்வயல் பகுதியானது வண்டல் மண் நிறைந்ததாக இருப்பதால் அதைப் பலமுறை உழுவதன் மூலமே நடவு செய்ய இயலும். இச்செயலை கவனித்த தலைவி பரத்தையிடம் இருந்து மீண்டு வாயில் வேண்டும் தலைவனுக்கு கேட்கும்படியாக பலமுறை உழப்பட்ட மண்ணின் தன்மையினைத் தனது மனநெகிழ்விற்கு உவமையாகக் குறிப்பிடுவதை,

**"…………………..,உறு பெயல்**
**தண் துளிக்கு ஏற்ற பல உழு செஞ் செய்**
**மண் போல் நெகிழ்ந்து……." (அகம்.26, 23-25)**

எனும் வரிகளின் வழி உணரமுடிகின்றது. மழையின் குளிர்ந்த துளிகளை ஏற்றுக்கொண்ட பலமுறை உழப்பட்ட செம்மையான வயலின் மண்ணைப்போல என் நெஞ்சம் நெகிழ்ந்து கலங்கியது என்று குறிப்பிடும் கருத்தினை ஆய்ந்து அறியமுடிகின்றது.

இத்தகைய மண்ணின் தோற்றம் மற்றும் அதன் மூன்றுவகை குறித்த செய்தி குறிப்பிடத்தக்கது. **"பூமியின் நிலப்பரப்பிலேயே தாவரங்கள் உயிர்வாழ்வதற்கு ஏற்றதாக இருக்கும் தாது, கரிமம் ஆகிய பொருள்களின் கலவை மண் எனப்படும்."**

**"மண்ணிலுள்ள தாதுப்பொருளானது மணல் (sand) வண்டல் (silt) களி (clay) என்னும் மூன்று வகைகளால் ஆகியிருக்கிறது. கப்பியும் (gravel) பல்வேறு பருமனுள்ள கற்களும் அதில் இருப்பதுண்டு"** என்பதை டாக்டர். இல.செ.கந்தசாமி அவர்கள் கருத்துக்களின்வழி அறியமுடிகின்றது. (தமிழர் வேளாண்மை மரபுகள், ப.52-53)

சங்ககால மக்கள் மண்ணின் வகையை அறிந்து அதற்கேற்ற வகையில் வேளாண்மை செய்திருப்பதையும், அதை தன் உணர்வுகளோடு உவமைப்படுத்தி இருப்பதையும் இதன்வழி அறியலாகின்றது.

**நீர் இன்றி அமையாது உலகு – தலைவன் இல்லாது தலைவியின் வாழ்வு இல்லை**

உலகில் உயிர் வாழ்வதற்கு ஆதாரமாக விளங்குவது நிலமும், நீரும் என்ற இரண்டுமேயாகும். இவை இல்லாமல் உயிர்கள் வாழ இயலாது. அதைப்போன்றே தலைவன் இல்லாது தலைவியால் வாழ இயலாது என்பதை நிலத்துடனும், நீருடனும் உயர்வு படுத்திக்கூறியிருப்பதை,

**"நீர் இன்று அமையா உலகம் போலத்**
**தம் இன்று அமையா நம் நயந்தருளி" (நற்.1, 6-7)**

எனும் பாடல் அடிகள் இயம்புகின்றன. தண்ணீர் இல்லாமல் இவ்வுலகம் அமையாது. அதுபோல அவர் இல்லாமல் தாம் இல்லை. நம்மீது மிகவும் விருப்பம் கொண்டவர் அவர் என்று கூறுவதன் திறத்தை அறியமுடிகின்றது.

நீரின் அவசியத்தை உணர்த்தும் ப.மு. நடராஜன் **"காற்றுக்கு அடுத்தப்படியாக உயிரினங்களின் உயிர்வாழ்விற்கும் மேலும் அவற்றின் வாழ் ஆதாரத்திற்கும் தண்ணீர் பயன்படுவதால் தான் மற்ற இயற்கை வளங்களைவிட தண்ணீர் அதிக அளவில் பயன்பட்டு வருகிறது."** (நீர் மேலாண்மை, ப.28) என்று குறிப்பிடுவதை அறியமுடிகின்றது.

**தலைவியின் இளமை நிலையாமைக்கு குளத்து நீர் குறைவது பின்புலம்**

தலைவியின் இளமை நிலையாமையைக் கூறவறுமிடத்து,

**முகைவாய்த்த தடம்போலும் இளமையும் நிலையுமோ? (கலி.17:16)**

எனும் பாடல் வரியானது, பூந்தாதுகளோடு விளங்கும் குளிர்ந்த மலரின் முகைக்கு வாய்ந்த நீர்

நிறைந்த தடம் அந்நீர் நாள்தோறும் குறையுமாறு போல, நாள்தோறும் குறையும் இளமையும் இவளுடன் நிலைபெறுமோ? என்று குளத்து நீரானது நாள்தோறும் குறையும் என்பதை ஆதாரமாகக்கொண்டு தலைவியின் அழகும் அதுபோல் குறையும் என்பதற்குச் சான்றாக கூறியிருப்பதை ஆராய்ந்து அறியமுடிகின்றது.

**காற்றுடன் தலைவி வினவுதல்**

மழை இல்லாமலும் உலகில் உயிர்கள் நெடும்பொழுது வாழ இயலும். ஆனால் காற்று இல்லாமல் நொடிப்பொழுது வாழ இயலாது. அத்தகைய உயிர்களை எல்லாம் வாழ வைக்கக்கூடிய கருணை உடைய காற்றிடத்தில் தலைவி வினவும் செய்தியாக,

**“ஆர் அளி இலையோ நீயே? பேர் இசை**
**இமயமும் துளக்கும் பண்பினை**
**துணை இலர், அளியர், பெண்டிர் இஃது எவனே?”** **(குறுந்.158)**

என்ற பாடல் வரிகள் குறிப்பிடுவதை, நீ நிறைந்த அருள் உடையை அல்லையோ. துணையில்லாதவர்களும், பிறரால் அளிக்கத்தக்கவர்களும் ஆகிய பெண்பாலரிடத்து இவ்வலிமையைக் காட்டுவதால் யாது பயன் உடைத்து என்பதன் வழி கவுக் காலத்தில் தலைவி, தலைவனுடன் இல்லாது பிரிந்து உள்ள சூழலில் காற்றானது தன்னை வருத்தத்தைத் தாங்கமுடியாமல் கூறுவதை ஆராய்ந்து உணரமுடிகின்றது.

இதன்வழி, இயற்கையான காற்றைத் தன் உணர்வுடன் தொடர்பு படுத்தி அதனுடன் பேசுவதை அறியமுடிகின்றது.

**மீனவர் - ஒண்பதம் நோக்கிக் காத்திருத்தல்**

பூமியில் உயிரினங்கள் வாழ்வதற்கு காற்று அதாவது வளிமண்டலம் அவசியமாகும். **“பூமியில் மட்டுமே உயிரினங்களின் வாழ்கைக்கு அனுகூலமான வளிமண்டலம் உள்ளது. இது பூமிக்கு இயற்கை இன்னை தந்த பரிசு என்று தான் சொல்லவேண்டும். இல்லாவிட்டால் பூமியில் உயிரினங்களின் தோற்றம் ஏது? இவற்றின் பரிணாம வளர்ச்சி ஏது? பிற கோள்களைப்போல பூமியும் உயிரினம் ஏதும் இல்லாத வெறும் கற்கோளாகத் தான் இருந்திருக்கும்”** (காற்றை மாசுபடாமல் காப்போம் - டாக்டர் மெ.மெய்யப்பன், ப.1) இதன் மூலம் அவர்கள் காற்றின் தேவையையும் அவசியத்தையும் அறிந்துகொள்ளமுடிகின்றது.

**‘காற்றுள்ள போதே தூற்றிக்கொள்’** என்ற பழமொழிக்கு ஏற்ப காற்றின் பதம் நோக்கியும் சில தொழில் நடப்பது வழக்கம். அவ்வகையில் கடல்மேல் படகைச் செலுத்தும் மீனவர் காற்றின் திசை அறிந்து செலுத்துவார்கள் என்பதனை,

**“…………………. கடல் மேம் பரதவர்**
**நீல் நிறப் புன்னைக் கொழு நிழல் அசைஇ,**
**தண் பெரும் பரப்பின் ஒண் பதம் நோக்கி,”** **(நற்.4,ப.1-3)**

எனும் இப்பாடல் அடிகள் எடுத்தியம்புகின்றன. கடலின் மேற் செல்லும் மீனவர் நீல நிறப் புன்னை மர நிழலிலே தங்கி குளிர்ந்த பெரும்பரப்பை உடைய கடலின் மேற் செல்லுதற்குரிய செவ்வி பார்த்து, முறுக்குண்ட வலையைப் பரித்து காய விடுவர் என்பதை அறியமுடிகின்றது.

இதன்மூலம் காற்று உயிர் வாழ்வதற்கு மட்டும் பயன்படாமல் தொழில் செய்யவும் பயன்பட்டிருப்பதை அறியமுடிகின்றது.